# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,903—1970 අප්‍රේල් 24 වැනි සිකුරාදා—1970.4.24

14,903 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. — .. | 355 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 367 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் . | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | 368 | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் — .. | 369 | நானாவித அறிவித்தல்கள் — — . | — |


## பதவிகள் — வெற்றிடம்

**" இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "**

1. *படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. *சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்றும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. *நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத வீதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அரச சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. *அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் தை.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவர் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், இவற்றுடன் கடமை. சட்டத்துக்கு மேற்படாத நீடிப்பையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப் பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை—ஏனைய சகல அம்சங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை அல்லது பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழித்து) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1945 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ந் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்—(i) நிலையமுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ எனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு நன்னடத்தைச் சாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின் அது தெரிவுக்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரைவிலக்கணம்—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் [illegible] முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

இல. A/18X2231/70

## கனிட்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் நூல்நிலையவியல் விரிவுரையாளர்

### I ஆந் தர பதவிகள்

கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் நூல்நிலையவியல் விரிவுரையாளர், I ஆந் தர பதவிகளுக்கு (ஆண்/பெண்) இரு பாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் தயாரிக்கப்பட்டு பின்வரும் திகதிகளில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக எனக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(i) உண்ணாட்டு விண்ணப்பங்கள்—1970.5.8.

(ii) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—1970.5.15.

குறிப்புகள் :

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைகளுள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **சம்பளமும் சகாயப் படிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப் பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

(i) ரூபா 11,520—10 × 480—16,320 வருடாந்தம். வருடாந்தச் சம்பளம் ரூபா 14,880 பெறமுன் வினைத்திறமைகாண் தடை ஒன்றுண்டு.

**குறிப்பு.**—1.10.69 க்கு முன் இதற்கு ஒத்த சம்பள அளவுத் திட்டம் :—ரூபா 8,880—9 × 480—13,200 வருடாந்தம்.

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இத்தீவிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரி எதிலேனும் கடமை புரியவேண்டும். தற்போது காலியிடங்கள் தெஹிவலை, பலாலி, கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் உண்டு ; தெரிவு செய்யப்படுபவர்கள் இக் கல்லூரிகளில் ஒன்றுக்கு நியமிக்கப்படக்கூடும்.

3. **நியமன நியதிகள் ;**

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும்.

(ii) நியமனங்கள், முதற்கண், 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின் வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டவேண்டும் :—

(அ) 8.5.1970 ந் திகதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசினர் சேவையில் ஏற்கனவே நிரந்தர நியமனங்களை வகிப்பவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(ஆ) (i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பட்டம் பெற்றிருக்க வேண்டும் (முதலாம் இரண்டாம் தர பட்டதாரிகளுக்கு விசேட சலுகை அளிக்கப்படும்).

(ii) நூல் நிலையவியலில்/நூல்நிலைய வேலை சம்பந்தமான நூல்நிலைய அதிபரியலில் பட்டம் பெற்றபின் உள்ள தராதரங்கள் ; அல்லது

ஐக்கிய இராச்சியத்தில் உள்ள நூல்நிலையச் சங்கத்தால் அல்லது இலங்கை நூல்நிலையச் சங்கத்தால் நடாத்தப்படும் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(iii) பல்கலைக் கழகத்தில் 5 வருட படிப்பித்தல் அனுபவம் அல்லது தொழில் நுட்பக் கல்லூரி ஆசிரிய கலாசாலையில் அல்லது உயர்தரக் கல்வி மட்டத்தில் 7 வருடங்களுக்குக் குறையாத படிப்பித்தல் அனுபவம் அல்லது இவைகள் எல்லாவற்றிலுமான படிப்பித்தல் அனுபவம் ; அல்லது பல்கலைக் கழகம் அல்லது அதே போன்ற ஸ்தாபன நூல்நிலையத்தில் இரண்டு வருட நிர்வாக அனுபவம்.

**குறிப்பு.**—மேற்குறித்த 3 ம் பந்தியில் உள்ள தராதரங்களுக்கு ஏற்ற விண்ணப்பதாரிகள் இல்லாவிடில் 3 ம் பந்தியில் குறிக்கப்பட்டுள்ள கால அனுபவத்திலும் பார்க்க குறைந்தவர்களுடைய விண்ணப்பங்களும் கவனிக்கப்படும்.

(இ) தெஹிவலை, காலி, கேகாலை அல்லது குளியாப்பிட்டி கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியிலுள்ள பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் கடமை ஆற்றுதற்கு வேண்டிய சிங்கள அறிவும் பலாலியிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியிலுள்ள பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் கடமை ஆற்றுதற்கு வேண்டிய தமிழ் அறிவும் பெற்றிருக்க வேண்டும். நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படும் எவரையும் விதிக்கப்படும் ஒரு மட்டத்தில் தான் குறித்துரைக்கும் ஒரு காலத்துக்குள் சிங்களத்தில் அல்லது தமிழில் (காரியத்திற்கேற்ப) மேலும் தேர்ச்சி பெறுமாறு மகா வித்தியாதிபதி வேண்டலாம்.

(ஈ) சிறந்த நல்லொழுக்கமும் தேக ஆரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும் பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்கள்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) தமிழில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு :—**

(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை,

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 17 ந உ.

4–801/1—24.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,903

---

**No. AB 42/X—2232/70.**

## ஆயுள்வேத திணைக்களம்

### II ஆம் தர ஆயுள்வேத விரிவுரையாளர் பதவிகள், ஆயுள்வேத கல்லூரி

ஆயுள் வேத திணைக்களத்தில் ஆயுள்வேதக் கல்லூரியின் II ம் தர ஆயுள்வேத விரிவுரையாளர் (ஆயுள்வேத பிரிவு) பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று செயலாளர், அரசாங்கசேவை ஆணைக்குழு, த. பெ. இலக்கம் 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல்வேண்டும் :—

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள்: 8.5.1970.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 15.5.1970

குறிப்பு :—

(i) அச்சிட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் சொந்த முகவரி இடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும், முத்திரையிடப்படாததுமான உறை ஒன்றினை தமது கடிதத்துடன் அனுப்புவதோடு, அபேட்சகராக வர இருப்பவர் அரசாங்க சேவை உத்தியோகத்தரா அல்லாதவரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதிக்கப்பட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் எதுவும் கவனிக்கப்படமாட்டாது. தங்கள் விண்ணப்பங்களை இறுதிநாள்வரை தாமதிக்கும் அபேட்சகர் அதனுலேற்படும் இடருக்குத் தாமே பொறுப்பாவார்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களைக் குறித்த காலத்திற்குள், அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டிற்குமிக அருகிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பிவைக்கலாம்.

(iv) மருத்துவச் சோதனையும், பயணச்செலவும் :

இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவுசெய்யப்பட்ட இலங்கையரான உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களா, என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத்தொழில் செய்பவர்களிடம் செல்லுமாறு வேண்டப்படுகின்றனர். அத்தகைய சோதனைக்கான கட்டணமும் இலங்கைக்குப் பயணமாகுவதற்குரிய செலவும் அவ்வுத்தியோகத்தர்களாலேயே கொடுக்கப்படல்வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்** :—இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச்சம்பள உரித்துடையதுமாகும். விதவைகள் அநாதைகள், உபகாரச் சம்பள நிதிக்கு உதவு தொகை செலுத்தப்படல் வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் சொந்த மருத்துவச் செய்கைக்கு உரித்துடையவராக மாட்டார்.

3. **சம்பளமும், படிகளும்** :—இப்பதவிக்கான திரட்டுச் சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ஆண்டொன்றிற்கு ரூபா 6,780—12 × 360—11,040. 9,600 ரூபாவிற்கு முன்னர் தகுதிகாண் தடை, 9,600 ரூபாவிற்கு முன்னுள்ள தகுதிகாண்தடை, தன் முதலான ஆராய்ச்சி அல்லது ஆயுள்வேதம் தொடர்பான வெளியீடுகளினுல் அவ்வுத்தியோகத்தரின் திறமையை வெளிப்படுத்தும் குறிப்பிடத்தக்க பெறுபேறுகள் அல்லது உயர்ந்த பட்டத்திற்குபின் பெறும் தகைமைகள் ஆகியவற்றில் ஒன்றை உள்ளடக்கியதாயிருக்கும்.

4. **தேவைப்படும் தகைமைகள்** :—ஒவ்வொரு அபேட்சகரும் (அவன் அல்லது அவள்) திருப்திகரமாக நிரூபிக்கவேண்டியதாவது,

(அ) சிறந்த நன்னடத்தையும் தேகாரோக்கியமும் உடையவரெனவும்,

(ஆ) 8.5.1970 ல் 25 வயதிற்கு குறையாதவரெனவும், 40 வயதிற்கு மேற்படாதவரெனவும் (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இக்கூடிய வயதெல்லை பொருந்தாது).

(இ) முதலாம் வகுப்பு சிறப்புச்சித்தியுடன் அல்லது 1965 ம் ஆண்டிற்கு முன்னர் சிறப்புச் சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட ஆயுள்வேதக் கல்லூரி ஒன்றின் டிப்ளோமா பட்டமுடையவரெனவும் திருப்திகரமான அத்தாட்சிகளைக் காட்டுதல் வேண்டும். அல்லது பட்டத்திற்குபின் ஆயுள்வேதத்தில் உயர்தகைமை பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு** :— அங்கீகரிக்கப்பட்ட ஆயுள்வேதக் கல்லூரி ஒன்றின் 2 ம் வகுப்பு சிறப்புச் சித்தியுடையவர்கள் அல்லது 1965 ம் ஆண்டிற்கு முன்னர் 1 ம் வகுப்பில் சித்தியெய்தி டிப்ளோமா பெற்றவர்களும் இந்தப் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம். எனினும் 4 ம் பகுதி "சி" பிரிவின் படி விண்ணப்பதாரர்கள் குறைவாக இருக்கும் பட்சத்தில் மேற் கூறப்பட்டவர்களின் விண்ணப்பங்களும் பரிசீலனை செய்யப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் கேட்கும்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப்பதிவு சான்றிதழ் (மு. கு. சமயகுேசைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பெற்ற சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) பல்கலைக் கழகப் பட்டம் அல்லது மிகஉயர்ந்த கல்விச்சான்றிதழ்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு. இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருக்கவேண்டும்.

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் இவற்றில் சித்தி பெற்ற மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு :—

(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவர்களுக்கூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும். எனினும் அவர்கள் தாங்கள் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அவ் அறிவித்தல் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்ப படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்ட) அஞ்சலட்டையை இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறு தொடர்புகளும் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு என முகவரியிடப்பட்டு அனுப்பப்படவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தர்களுக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பக்கூடாது.

8. இந்த வர்த்தமானியின் ஆரம்பத்தில் I ம் பகுதி II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு வேண்டப்படுகின்றனர்.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சலட்டையை ("அ" எனக்குறிப்பிடப்பட்ட) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பி திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்களின், விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும்.இத்தேவைக்கமைய ஒழுகாத அபேட்சகர்களின விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்பட யாட்டாது. இத்தேவைக்கமைய ஒழுகுபவர் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்கசேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின் படி ஒழுகத்தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுமுடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த.பெ. இலக்கம் 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 17 ந உ.

4–801/2—24.4.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,903

---

இல. AA. 37/X 2233/70

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பொறிமுறை எந்திரவியல் I ஆந் தர விரிவுரையாளர் பதவி அல்லது இப்பதவிப் பயிற்சிக்கான புலமைப் பரிசில் அளித்தல்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள அம்பாறை, ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்தில் உள்ள பொறிமுறை எந்திரவியல், I ஆந் தர விரிவுரையாளர் பதவிக்கு அல்லது இப்பதவிப் பயிற்சிக்கான புலமைப் பரிசில் அளித்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, " செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 " என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணுட்டு விண்ணப்பங்கள்—8.5.1970.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—15.5.1970.

**குறிப்புகள் :**

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனுலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந் நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவாரர்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் கைம்பெண் அனாதை இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு கட்டணம் செலுத்த வேண்டும். நியமதாரி முதற்கண் 3 வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

3. **சம்பளமும் ஏனைய படிகளும்.**—இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

ரூபா 11,520—10 × 480—16,320 வருடாந்தம். (ரூபா 14,880 க்கு முன் வினைத்திறமைகாண் தடை உண்டு).

**குறிப்பு.**—5ஆம் பந்திக்கமைய பயிற்சியாளர் ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து அவருடைய சம்பளம் அல்லது சகாயப்படி திறைசேரியுடன் கலந்தாலோசித்து தீர்மானிக்கப்படும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 8.5.1970 ந் திகதியன்று 30 வயதுக்குத் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் பொறிமுறை எந்திரவியலில் வழங்கப்படும் I ம் அல்லது II ம் வகுப்புச் சிறப்பு விஞ்ஞானமானி (எந்திரவியல்) தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

(ii) பொறிமுறை எந்திரவியலில் விஞ்ஞான முதுமானி அல்லது கலாநிதிப் பட்டம் அல்லது பொறிமுறை எந்திரவியலாளர் கூட்டுறுப்பினர் தகைமைப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(iii) அரசாங்க நிலையத்தில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட நிலையத்தில் 5 வருட படிப்பித்தல் அனுபவம் அல்லது செயல்முறை அனுபவம் அல்லது இவ்விருவகை அனுபவங்களும் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) சிங்களத்தில் படிப்பித்தற்கான ஆற்றல் பெற்றிருக்க வேண்டும் அல்லது நியமனத் திகதியிலிருந்து ௫ வருட காலத்துக்குள் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டும்.

5. **பயிற்சிக்கான புலமைப் பரிசில் அளித்தல் தொடர்பில் அமையும் விதிகளும் நிபந்தனைகளும்.**—(1) மேற்படி 4 ம் பந்தியில் கொடுபட்டுள்ள தகைமையுடையவர்கள் எவர்களிடமிருந்தாவது விண்ணப்பங்கள் வராவிடின், இப்பதவிக்கு தகுதியான விண்ணப்பதாரிகள் எவராவது இல்லாவிடின், பயிற்சியாளராக நியமனம் பெறுவதற்கு பின்வரும்தகைமைகளையுடையவரிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படும் :—

(அ) **வயது :** 8.5.1970 அன்று 26 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (வயதெல்லை சகலருக்கும் ஏற்புடையதாகும்).

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் பொறிமுறை எந்திரவியலில் வழங்கப்படும் I ம் வகுப்பு அல்லது II ம் வகுப்புச் சிறப்புப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(இ) அரசாங்க நிலையத்தில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட நிலையத்தில் 5 வருட படிப்பித்தல் அனுபவம் அல்லது செயல்முறை அனுபவம் அல்லது இவ்விருவகை அனுபவங்களும் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்படுபவர் வெளி தேசத்தில் பயிற்சி பெறும்படி வேண்டப்படலாம். பயிற்சிக் காலத்தில் தகுதியான சகாயப் பணமளிக்கப்படும்.

(iii) தெரிவு செய்யப்பட்டவர் வெளி தேசத்தில் பயிற்சி பெற நேரிடின், அவர் இலங்கை அரசாங்கத்துடன் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளவேண்டும் :—

செய்வதாக உறுதிப்படுத்தும் பிறவற்றுள், குறித்த பயிற்சியை நம்பிக்கையுடனும் கெட்டித்தனமாகவும் செய்து, திருப்திகரமாகப் பயிற்சியை முடித்து, அதன் பின்னர் இலங்கை அரசாங்கம் விரும்பின் (அரசாங்கம் தீர்மானிக்கும்) குறித்த ஒரு காலத்துக்கு அதன் சேவையிலீடுபடுவதாகவும்,

உடன்படிக்கையின் விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக நடக்கத்தவறின் இலங்கை அரசாங்கத்துக்கு, இப்பயிற்சி முழுவதற்குமாக இலங்கை அரசாங்கத்தால் அல்லது புலமைப் பரிசில் வழங்கும் ஸ்தாபனத்தினால் அல்லது இரண்டினாலும் செலவழிக்கப்பட்ட சகல செலவினங்களையும் (உதாரணமாக சம்பளம், சகாயப்பணங்கள், பிரயாணச் செலவு, பிற செலவுகள் ஆதியன) திருப்பிக் கொடுப்பதாக உறுதிப்படுத்துவதாகவும் உடன்படிக்கை செய்தல் வேண்டும்.

(iv) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் உயர்தொழில் தகைமைகளை அல்லது பொறிமுறை எந்திரவியல் பட்டப்பின் தகைமைகளைப் பெற வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும் பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக் கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்கள்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு:**

(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள்விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ ஆ ” எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர் அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ அ ” எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறாவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு எப்பிரல் மீ 17 ந உ.

4-801/3—24.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,903

இல. AA36/X2234/70

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பதவி : பாடசாலைக் கட்டட வேலைகள் அதிபர்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள பாடசாலைக் கட்டட வேலைகள் அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, `செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 8.5.1970.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 15.5.1970.

**குறிப்புகள்**

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந் நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் :** இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன்பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச் சம்பளப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும். பெண் ஒருவர் நியமிக்கப்படுமிடத்து அரசாங்க சேவை சகாய நிதி நலன்களுக்கு அவர் உரித்துடையராவர் ; இந் நோக்கத்திற்கு அரசாங்க சேவை சகாய நிதிக்கு அவர் தனது சம்பளத்தில் 5% செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படுபவர், ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான சேவையில் இல்லாவிடின் அவருடைய நியமனம் ; காரியத்துக்கேற்ப, மூன்று வருட காலத்துக்கு தகுதிகாண் முறையில் அல்லது பரீட்சார்த்த முறையில் அமையும். பெண் உத்தியோகத்தர் ஒருவர் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்யமுன் எந்நேரத்திலேனும் அவர் சேமலாப நிதிக்கு தொடர்ந்து கட்டணம் செலுத்தவா அல்லது இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றப்படவா விரும்புகிறார் என அறிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் அல்லது சேமலாப நலன்களைக் கொண்ட ஒரு பதவியில் அல்லது இவ்விரண்டின் கீழும் ஏற்கனவே அவர் 10 வருட சேவை பூர்த்தி செய்திருப்பின், நியமிக்கப்படும் ஆறு மாத காலத்திற்குள் தனது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும்.

(ii) நியமனம், முதற்கண் மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும். நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை ஏற்கனவே வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து, அவருடைய பதவி முதற்கண், ஒரு வருடத்துக்கு பதில் நியமனமாக அமையும்.

(iii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர், பதவியில் உறுதிப்படுத்தப்படுதல், ஏனைய விடயங்களுடன் அரசினர் சேவை ஆணைக்குழு விதிகளும் நிருவாக விதிகளும், நிதிப் பிரமாணங்கள் ஆகியவற்றிலான வினாப் பத்திரங்களைக் கொண்ட ஒரு பரீட்சையில் சித்தியடைதலைப் பொறுத்ததாகும். தகுதிகாண்/பரீட்சார்த்த/பதில் கடமைபுரியும் காலத்துக்குள் இப்பரீட்சையில் சித்தி அடையத் தவறினால் 120 ஆம், 121 ஆம் இலக்க நிருவாக விதிகளின் ஏற்பாடுகள் அமையும்.

(iv) தெரிவு செய்யப்படுபவர், பொது எழுதுவினைஞர் சேவையின் நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பின் II ஆந் தர உத்தியோகத்தர்களுக்கான தேசீய மொழிகளிலான பரீட்சையில் சிங்களத்தில்/தமிழில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருட காலத்துக்குள் சித்தியடைய வேண்டும். விதிக்கப்பட்ட காலத்துக்குள் இப் பரீட்சையில் சித்தியடையத் தவறுமிடத்து 146 ஆம் இலக்க நிருவாக விதி ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

3. **சம்பளங்களும் சகாயப் படிகளும்.**—இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :

ரூபா 17,640—3 × 600—19,440 வருடாந்தம்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 8.5.1970 அன்று 35 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) லண்டன் குடிசார் எந்திரவியலாளர் கூட்டுறுப்பினர் தகைமை அல்லது சமமான தகைமைகள் பெற்றிருப்பதுடன் எந்திரவியலாளராக 13 வருடங்களுக்குக் குறையாத சேவை புரிந்திருக்க வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும் பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக் கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்கள்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

(ஊ) மேலுள்ள 4 (இ) ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தகைமைகளை அத்தாட்சிப்படுத்தும் தராதரப் பத்திரங்கள்.

**குறிப்பு**

(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ ஆ ” எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம், கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 17 ந் உ.

4-801/4—24.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,903.

---

## காலி மாவடத்தில் கோட்டாவைப் பிரிவிற்கு பிறப்பு இறப்பும் தல்பே பற்றுப் பகுதிக்கு விவாகப் பொது பதிவாளர் பதவி

கோட்டாவைப் பிறப்பு இறப்பு பதிவுப்பிரிவுக்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கிறவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவுத் திகதியன்று இருபத்தொரு வயதிற்குக் குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிறதாரதரங்கள். நிபந்தனைகள் ஆகிய விபரங்களடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும். காரியாதிகாரியின் அலுவலங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும். உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும். கிராம நீதிமன்றங்களிலும். தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும். கூட்டுறவு தாபன நிலையங்களிலும் இந்தப் பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 15 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

பீ. ஏ. ரீ குணசிங்க,
மாவட்டப் பதிவாளர்.

காலி,
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
1970 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 9 ந் உ.

4-690—24.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,903

---

## கொழும்பு மாவட்டத்தில் நாறுன்வல பிரிவிற்கு பிறப்பு, இறப்பு சியஞகோறளை மேற்கு பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

பிறப்பு, இறப்பு பதிவுப்பிரிவுக்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொதுமக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தியொரு வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களை பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிகப்பட மாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித்தராதரங்களும், ஏனைய பிறதாராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராமசேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுதாபன நிலையங்களிலும் இந்த பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1970 ம் ஆண்டு வைகாசி மாதம் 17 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

றிச்சேட் குணசேகர,
மவாட்டப் பதிவாளருக்காக.

கொழும்பு,
மாவட்டப்பதிவாளர் அலுவலகம்,
1970 ம் ஆண்டு சித்திரை மீ 7 ந் உ.

4-660—24.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,903

---

## கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு (மோதற) பிரிவுக்கு விவாக (பொது) பதவியாளர் பதவி

கொழும்பு மோதற பகுதிக்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பமுடிவு திகதியன்று இருபத்தியொரு வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்கசேவையில் கடமையாற்றுபவர்களை பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித்தராதரங்களும், ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராமசேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுதாபன நிலையங்களிலும் இந்த பிரிவிக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1970 ம் ஆண்டு வைகாசி மாதம் 17 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

றிச்சேட் குணசேகர,
மாவட்டப் பதிவாளருக்காக.

கொழும்பு,
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
1970 ம் ஆண்டு சித்திரை மீ 7 ந் உ.

4-658—24.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,903.

## கொழும்பு மாவட்டத்தில் றதாவான பிரிவிற்கு பிறப்பு, இறப்பு சியஞ கோறளை கிழக்கு பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

றதாவான பிறப்பு, இறப்பு பதிவுப்பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவுதிகதியன்று இருபத்தியொருவயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களை பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித்தராதரங்களும், ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராமசேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிசபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ். ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுதாபன நிலையங்களிலும் இந்த பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1970 ம் ஆண்டு வைகாசி மாதம் 17 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

றிச்சேட் குணசேகர,
மாவட்டப் பதிவாளருக்காக.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
கொழும்பு,
1970 ம் ௵ சித்திரை ௴ 7 ந் உ.

4–659—24.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,903

---

## இரத்னபுரி மாவட்டத்தில் இரத்னபுரி நகர பிரிவிற்கு முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி

கலியாண பதிவு பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், விவாகமாகி மனைவியுடனிருப்பவர்கள் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொருவயதிற்கு குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலத்திலும் காரியாதிகாரியின் அலுவலகங்களிலும் கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும், நீதி மன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தாபனம், சனசமூக நிலையங்களிலும் பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத்தாபன நிலையஙகளிலும் இந்த பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும் காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடஙகியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1970 ம் ஆண்டு வைகாசி மாதம் 16 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

எஸ். ஜீ. சமரசிங்க,
மேலதிக மாவட்ட அதிகாரி,
மாவட்டப் பதிவாளருக்காக.

பெரும்பகுதிப் பதிவுகாரர் காரியாலயம்,
இரத்தினபுரி,
1970 ம் ௵ சித்திரை ௴ 10 ந் உ.

4–692—24.4.70 ந் திகதிய வர்த்தமனி இல. 14,903

---

## வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் வெற்றிடங்கள்

### எழுதுவினைஞர்கள் பதவிகள்—பொது எழுதுவினைஞர் சேவை

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் எழுதுவினைஞர்கள் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் பொது எழுதுவினைஞர் சேவையின் நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பு, தரம் II இன் உறுப்பினர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

2. பிறநாடுகளிலுள்ள் இலங்கையின் ஒன்றுக்கு மேற்பட்ட தூதரகங்களில் ஏலவே சேவைபுரிந்துள்ளோர் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

3. திருமணமாகா அல்லது திருமணமாகிச் சிறு குடும்பங்களுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்கள் முன்னுரிமை பெறும்.

4. விண்ணப்பங்கள், இதற்குரிய அட்டவணையிற் காட்டப்பட்டிருக்கும் படிவத்திலுள்ளவாறு அமைந்திருப்பதுடன், அவ்வத்திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பப்படவும் வேண்டும். மேலும், அவ்விண்ணப்பஙகள், கடல்கடந்த சேவைக்கு விண்ணப்பதாரரின் பொருத்தமுடைமை பற்றியும் தெரிவுசெய்யப்படின் விண்ணப்பதாரர் தனது தற்போதைய நியமனத்திலிருந்து விடுவிக்கப்படக்கூடும் எனவும் விண்ணப்பத்தில் அளிக்கப்பெற்ற விபரங்கள் சரியானவை எனவும் கூறும் விண்ணப்பதாரர் சேவை புரியும் திணைக்களத்தின் தலைவரிடமிருந்தான புறக் குறிப்பொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

5. கணக்கீட்டு, நிறுவன வேலையில் முன்னைய அனுபவமுடைய அலுவலர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

6. இப்பதவிகளுக்குத் தெரிவுசெய்யப்பெறும் அலுவலர்கள் கடல் கடந்த சேவைக்கு ஏற்ற தமது உடற்றகுதி தொடர்பாக ஒரு விசேட வைத்தியப் பரீட்சைக்கு உட்படும்வண்ணம் வேண்டப்படுவர். அவர்கள் ஆறு ஆண்டுகளுக்கு மேற்படா ஒரு கால வெல்லைக்குக் கடல்கடந்த சேவையாற்றும்படி வேண்டப்படுவர்.

7. இப்பதவிகளுக்குத் தெரிவுசெய்யப்பெறும் அலுவலர்கள் தமது உத்தேச அடிப்படைச் சம்பளத்தைத் தொடர்ந்து பெறுவதோடு, அத்துடன் மேலதிகமாக, இலங்கையிற் கொடுபடற்பாலதாகவுள்ள திரட்டப்பட்ட சம்பளத்திற்குப் பதிலாக, கடல்கடந்த படி ஒன்றையும் இறுக்கப் பெறுவர். பிற நியதிகளும் நிபந்தனைகளும் கடல்கடந்த சேவைப் பிரமாணக் குறிப்புகளில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவாறுக இருக்கும்.

8. முன்னர் இவ்வமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டா.

9. விண்ணப்பங்கள் 1970.5.31 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ இவ்வமைச்சை வந்தடைதல் வேண்டும்.

சீ. குணசிங்கம்,
நிரந்தரச் செயலாளருக்காக,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு,
மூதவைக் கட்டடம், கொழும்பு 1,
1970 ம் ௵ ஏப்பிறில் ௴ 9 ந் உ.

### அட்டவணை

1. விண்ணப்பதாரரின் சொந்தப் பெயர் முதலில் வரும்வண்ணம் அவரது முழுப் பெயர் (பெரிய, தெளிவான எழுத்துக்களில்) : ———.
2. (அ) பிறந்த திகதி : ———.
   (ஆ) 1970, மே மாதம் 31 ஆம் திகதியன்று வயது : ———.
   ஆண்டுகள் : ———. மாதங்கள் : ———.
3. முகவரி (அ) அலுவலகம் : ———.
   (ஆ) வதிவிடம் : ———.
4. தேசிய இனம் : ———.
5. திருமணமானவரா அல்லவா ? : ———.
6. திருமணமானவராயினின் பிள்ளைகளின் எண்ணிக்கை : ———.
7. கல்வித் தகைமைகள் : ———.
8. (அ) நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பு, தரம் II இனுள் புகுந்த திகதி : ———.
   (ஆ) அரசாங்கத்தின்கீழ் சேவை புரியப்பட்ட ஆண்டுகளின் எண்ணிக்கை : ———.
9. தற்போதைய ஆண்டுக்குரிய சம்பளம் : ———.
   (அ) திரட்டப்பட்ட சம்பளம் : ———.
   (ஆ) உத்தேச அடிப்படைச் சம்பளம் : ———.
10. தற்போதைய கடமைகளின் தன்மை : ———.
11. அனுபவம் (அ) கணக்கீட்டு வேலையில் : ———.
    (ஆ) நிறுவன வேலையில் : ———.
12. சிங்களத்தில் தேர்ச்சி : ———.
13. சிங்களத் தட்டெழுத்தில் தேர்ச்சி : ———.
14. பிற தகைமைகள் எவையேனும் : ———.

இதன்மேற் தரப்பட்டுள்ள தகவல் சரியானது என யான் சான்று பகர்கிறேன்.

———.
திகதி : ———. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

4–664—24.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,903

## இலங்கை அரச விமானப்படை உத்தியோகத்தருக்கான வெற்றிடங்கள்

### நிருவாக/சாதன தொழிநுட்ப (எந்திரவியல்) கிளைகள்

இலங்கை அரச விமானப்படையில் கீழ்க்காணும் வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(அ) நிருவாக/சாதனக்கிளையில் நான்கு உத்தியோகத்தர்கள்.

(ஆ) தொழிநுட்ப (எந்திரவியல்) கிளையில் ஓர் உத்தியோகத்தர்.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் இலங்கை அரச விமானப்படையில் விமானம் ஓட்டும் உத்தியோகத்தர் வரிசையில் ஆணை வழங்கப் படுவார்கள்.

3. நிருவாக/சாதனக்கிளையில் கடமையாற்றும் உத்தியோகத்தருடைய கடமைகள் (சகல விமானப் படை உத்தியோகத்தருடைய வழக்கமான கடமைகளை விட) இலங்கை அரச விமானப்படையின் தகவுப் பொருத்த மான ஆதாரங்களுடன் தொடர்புடையது. (அதாவது, இருப்புப் பொருள் கள், வானூர்தி, வாகனங்கள், தொழிநுட்பச் சாதனங்கள், எரிபொருள், வெடிப்பொருள் ஆகியனவற்றை வழங்கல், அசைவு மதிப்பீடு செய்தல், கட்டளையிடுதல், பெறுதல், களஞ்சியத்திடுகை, கணக்கிடுதல் ஆகியனவும் விமானப்படை நிருவாகமும் கணக்குப் பார்த்தலும் ஆகும்.)

4. தொழிநுட்ப (எந்திரவியல்) கிளையிலுள்ள உத்தியோகத்தருடைய கடமைகள் (சகல விமானப்படை உத்தியோகத்தருடைய சாதாரண கடமை களை விட) வானூர்தி அமைப்பு, உந்துவிசை அலகுகள், விமானச் சுழல் விசிறி, வளியியக்கம் சார்ந்த இயற்பியல், வானூர்தி காற்றுப்படை, வானூர்த்திக்குப் பொருத்தப்பட்டிருக்கும் பொறி முறைச் சாதனம் ஆகிய வற்றுடன் சம்பந்தப்பட்ட வேலைகளும் இலங்கை அரச விமானப்படையில் பொது எந்திரவியலும் தொழிநுட்ப நிருவாகமுமாகும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் தேவைப்பட்டபடி இலங்கையில் அல்லது வெளிநாட்டில் பயிற்சி பெறக் கோரப்படலாம்.

6. ***வேதனமும் படிகளும் :** சம்பளமும் படிகளும், 1961 ஏப்பிரல் 28 ல் இலங்கை அரசாங்க வர்த்தமானி இல. 12,395 ல் பிரசுரமாகி, காலத்துக்குக் காலம் மாற்றம் செய்யப்பட்ட விமானப்படை வேதனச் சட்டக்கோவை 1961 ன் படி அமையும்.

(அ) ஒழுங்கணித் தலைவர் (ஸ்குவாட்றன்ட் லீடர்) வரையுள்ள உத்தி யோகத்தர்களுக்குப் பொருத்தமான அடிப்படை வேதனம் பின்வருமாறு :—

விமானமோட்டும் உத்தியோகத்தர் : வருடத்திற்கு ரூபா 4, 500. வானூர்திப்படையில் பணி முதல்வர் : 2 வருட ஏற்றம் ரூபா 180 ம் ரூபா 360 ம் ஆக வருடமொன்றுக்கு ரூபா 4,860 லிருந்து ரூபா 5,580 ஆக உயர்வதாகும்.

விமானப்படைத் துணைத்தலைவர் : 180 ரூபா கொண்ட 6 படி ஏற்றங்கள் அமைந்து வருடமொன்றுக்கு ரூபா 6,660 லிருந்து ரூபா 7,740 ம் ஆக உயர்வதாகும்.

ஒழுங்கணித் தலைவர் : 180 ரூபா கொண்ட 6 படி ஏற்றங்கள் அமைந்து வருடமொன்றுக்கு ரூபா 8,820 லிருந்து ரூ. 9,900 ஆக உயர்வதாகும்.

(ஆ) கோல உடைப்படி-பொறுப்பளிக்கும் போது வெப்பமண்டல உடைகளுக்காக ரூபா 650 படியாக வழங்கப்படும். வெளி நாடுகளில் சேவைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப்பட்டால் மேலதிக உடைகளுக்கான படியாக ரூபா 1,300 வழங்கப்படும். இரண்டு வருட சேவைக் காலத்தை முடித்த பின்னர் ஒவ்வொரு மாதமும் ரூபா 25 கோல உடையைப் பேணும் படியாக வழங்கப் படும்.

(இ) ஏனைய படிகள் : வாழ்க்கைச் செலவுப்படி விசேட வாழ்க்கைச் செலவுப்படி, வாடகைப்படி ஆகியவை அரசாங்க விதிதப்படி வழங்கப்படும்.

7. இளைப்பாற்றுச் சம்பளம்/பணிக்கொடை ஆகியவை, 1962 செத் தெம்பர் 14ல் 13,301 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப் படடதும் காலத்துக்குக் காலம் திருத்தியமைக்கப்பட்டதுமான 1962 ம் வருட விமானப் படை இளைப்பாற்றுச் சம்பள பணிக்கொடைச் சட்டக் கோவையின்படி கொடுக்கப்படும். அரசின் கீழ் நிரந்தரமான, இளைப்பாற் றுச் சம்பளமுள்ள, தொடர்ச்சியான சேவையுள்ளது ; அல்லது, இலங்கைப் பாதுகாப்புப் படையில் அல்லது பிரித்தானிய பொது நலவரசின் கீழ் எழுந்த ஆயுத சேவையில் முன்னர் சேவை செய்திருந்தாலும் இளைப் பாற்றுச் சம்பளம் வழங்கப்படும்.

*திருத்தியமைத்தற்கான மேற்குறிப்பிட்ட வேதனமும், உபகாரச் சம்பளம், பணிக்கொடை ஆகியன ஆராயப்படுகின்றன.

8. **சேவை நிபந்தனைகள் :** 1951 ம் ஆண்டு ஏப்ரல் 27 ம் திகதி 10,240 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு காலத்துக் குக் காலம் திருத்தம் செய்யப்பட்ட இலங்கை அரச விமானப்படை (ஒழுங்கான, ஒழுங்கான ஒதுக்கு) யின் பிரயாணங்களின் படி இலங்கை அரச விமானப்படையின் உத்தியோகத்தர்களுக்கான வாய்ப்புகளும் சேவைக்கால நிபந்தனைகளும் அமைந்திருக்கின்றன.

9. ஒரு தனி உத்தியோகத்தர் உத்தியோகத்தர்களுக்கான உணவுப் பகுதியில் வசிப்பதுடன் இருப்பிட வசதி, உணவு உழையர் சேவை ஆகியவை வழங்கப்படும். அத்தகைய காலப்பிரிவில் அவருக்கு வா. செ. படியும் வி. வா. படியும் வழங்கப்படமாட்டா.

10. விவாகம் செய்த உத்தியோகத்தருக்கு விவாகஞ் செய்தவர்களுக் கான குடிமனை (கிடைத்தால்) வழங்கப்படும். தனிப்பட்ட உழையருக்குப் பதிலாக ஒரு படியும் வழங்கப்படும்.

11. எந்த நேரத்திலும் உலகின் எந்தப் பாகத்திலும் கடமையாற்றவோ அன்றிப் பயிற்சிக்காகவோ விமானப்படை உத்தியோகத்தர்களை அனுப்ப நேரிடலாம்.

12. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் 1956 ம் ஆண்டு 33 ம் இலக்கத் திலுள்ள ஆட்சிமொழிச் செய் சட்டத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாக வும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு அமைவாகச் செய்யப்பட்டுள்ள அல்லது இனிமேல் செய்யப்படும் எந்த விதிகளுக்கும் அமைவாக நடக்க வேண்டுமென்று கோரப்படுவர்.

13. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர், தன்னுடைய அடிப்படை வேதனத்தில் 4% விகிதத்தை சேவையின் விதவை அநாதைகள் இளைப் பாற்றுச் சம்பள நிதிக்கு உதவு தொகையாகக் கொடுக்க இசைந்துள்ள தாக ஒரு கடிதத்தைக் கொடுக்க வேண்டுமென்று கோரப்படுவர்.

14. **அடிப்படைத் தேவைகள்.**—விண்ணப்பகாரர் பின்வரும் இன்றிய மையாத தேவைகளை உடையோராக இருக்க வேண்டும்:—

(அ) தேசிய இனம் :

(1) வம்சாவழியால், அல்லது

(2) பதிவினால்.

(ஆ) **வயது** : அபேட்சகர்கள் 1970 ஆம் ஆண்டு யூலை 1 ம் திகதியன்று 26 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்கலாகாது.

(இ) **விவாகம்** : அபேட்சகர்கள் விவாகம் செய்யாதவர்களாக இருக்க வேண்டும். (பொறுப்பேற்ற நாளிலிருந்து இருவருடங்கள் வரை விவாகம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.)

**குறிப்பு** : உத்தியோகத்தர்கள் இலங்கையரல்லாதவர்களை விவாகம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள். இலங்கையரால் லாதாரைத் திருமணம் செய்தால் அதன் பிரகாரம் பொறுப்பு நீக்கப்படக்கூடும் அல்லது பதவி ஏற்றங்கள் நிறுத்தப்படும்.

(ஈ) **கல்வி/உயர்தொழில்** : அபேட்சகர்கள் பின்வரும் தராதரங்களில் ஒன்றை உடையவர்களென்பதற்கு திருப்திகரமான சான்று காட்டவேண்டும்.

(i) **நிருவாக/சாதனக்கிளை :**

(அஅ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் ஒரு பட்டம் அல்லது

(ஆஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் (கலை) அல்லது அறிவியல் தகுதிக்கான (பொது அல்லது சிறப்புத் தேர்வு) முதல் பரீட்சையில் சித்தியடைந் திருக்க வேண்டும்.

(இஇ) பொ. க. த. (உயர்தரம்) இல் ஒரே தடவையில், ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் தேர்ச்சியடைந் திருக்க வேண்டும்.

(ஈஈ) விமானப்படைத் தளபதியின் அபிப்பிராயப்படி மேலேயுள்ள (அஅ, ஆஆ, இஇ) வாசகங்களுக்கு சமமான தராதரம் எதையும் பெற்றிருக்க வேண்டும்.

(ii) **தொழிநுட்ப (எந்திரவியல்) கிளை :**

(அஅ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் எந்திர வியலில் அல்லது பௌதிகமும்/அல்லது கணித வியலுடன் கூடிய அறிவியலில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். (அபேட்சகர்கள் பின் சொல்லப்பட்ட தராதரங்களில் ஏதோ ஒன்றைப் பெற்றிருந்தாலும் அவர்களுக்கு எந்திரவியல் தராதரம் அல்லது அனுபவம் இருப்பின் கவனத்திற்கெடுத்துக்கொள் ளப்படுவார்கள்).

(ஆஆ) இலங்கைப் பல்கலைக் கழகத்தின் எந்திரவியலுக் கான முதல் பரீட்சையில் அல்லது அறிவியலில் (பொது அல்லது சிறப்பு) கணிதமும் பௌதிகமும் சித்தியடைந்திருக்க வேண்டும்.
அல்லது

(இஇ) இலண்டன் பல்கலைக் கழகத்தின் எந்திரவியல் இடைப் பரீட்சையில் அல்லது அறிவியலில் (கணிதமும் பௌதிகமும்) சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது

(ஈஈ) விமானப்படைத் தளபதியின் கருத்துப்படி மேலே சொல்லப்பட்ட (அஅ, ஆஆ, இஇ) வாசகங்களுக் குச் சமமான வேறு எந்தத் தராதரமும் உடைய வராக இருக்க வேண்டும்.

(உஉ) **வைத்திய நியமம் :** அபேட்சகர்கள் விமானப் படையின் வைத்திய நியமங்களுக்குப் பொருத்த மாயிருக்க வேண்டும். (குறைந்த உயரம் 5 அடி 5 அங்குலம். மார்பு 32 அங்குலம் நிறை ; 105 இருத்தல்.

### விண்ணப்பக்காரர்களுக்கான போதனைகள்

15. விண்ணப்பங்கள் இவ் அறிவித்தலிலுள்ள, பின்னிணைப்பு " அ " விலுள்ள படிவத்தில் செய்யப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்களின் அச்சிட்ட பிரதிகள் ஒன்றும் கிடைக்கமாட்டா. விண்ணப்பகாரர்கள் தாங்களே சொந்தப் படிவங்களைத் தயார் செய்யுமாறு கேட்கப்படுகிறார்கள். சொல்லப்பட்ட படிவத்தைப் போலமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

16. பின்னிணைப்பு " அ" வில் கொடுக்கப்பட்டுள்ள படிவம் சாதாரண முழுத்தாள் அளவுள்ள ஒரு தாளில் பிரதி செய்யப்பட்ட வேண்டும். எல்லா அடைப்புகளும் தெளிவான பெரிய எழுத்துக்களில் நிரப்பப்பட வேண்டும் அல்லது தட்டச்சில் பொறிக்கப்பட வேண்டும். ஒரு அடைப்பும் வெற்றாக விடப்படவோ அல்லது வெட்டப்படவோ கூடாது. விண்ணப்பத்தின் தலைப்பில் இரு அங்குல வெளியொன்று அலுவலக உபயோகத்துக்காக விடப்பட வேண்டும். விண்ணப்பத்தின் சகல பக்கங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு விண்ணப்பத்தின் படிவம் மேலே இருக்கவேண்டும்.

17. விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில் " விமானப்படை ஏவுநர் " இலங்கை அரச விமானப்படை, த. பெ. 594, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மூலையில் " விண்ணப்பம்-நிருவாக/சாதனக்கிளை, தொழினுட்ப (எந்திரவியல்) கிளை உத்தியோகத்தர்கள் " (தேவையற்றதை நீக்கிவிடுக) என்று குறிப்பிடப்படவேண்டும். விண்ணப்பங்கள் 1970 ஆம் ஆண்டு மே மாதம் 19 ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

18. விண்ணப்பங்களுடன் (மூலங்கள் அல்ல) கீழ்க்காணும் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்:—

(அ) விண்ணப்பகாரரின் பிறப்புச் சான்றிதழ்.

(ஆ) உயர்கல்வி/உயர் தொழிலுக்காகக் கிடைக்கப்பெற்ற தராதரச் சான்றிதழ்.

(இ) விண்ணப்பகாரருடன் நேரடியாகத் தொடர்புள்ள குறைந்தது பொறுப்பான இருவரிடமிருந்து பெற்ற குணச்சான்றிதழ்கள்.

(ஆ) விண்ணப்பத்தில் ஏதாவது கோரினால் அதற்கு ஆதாரமாகச் சான்றிதழ்கள்.

19. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தருடைய விண்ணப்பங்கள் அதற்குரிய திணைக்களத் தலைவரினால் அனுப்பப்படவேண்டும். அவ் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டால் விடுதலை செய்யப்படுவாரென்பதற்கு ஒரு சான்றிதழும் அதனுடன் இருக்க வேண்டும்.

20. பந்திகள் 14 உடனும் 18 உடனும் முழுவதும் சரியாக பொருந்தி வராத விண்ணப்பங்கள் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப் படமாட்டா.

21. விண்ணபகாரர்கள் நேரடியாக அல்லது மறைமுகமாக ஆதரவு நாடினால் அது தகைமை நீக்கமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**தேர்வுகள், நேர்முகப்பரீட்சை முதலியன.—**

22. விண்ணப்பம் கிடைத்ததும் ஒரு அபேட்சகர் பந்தி 14 ல் சொல்லப்பட்டபடி தேவையான தராதரமுடையவராயும், பொருத்தமானவரெனவும் காணப்பட்டால் அவர் அவருடைய சொந்தச் செலவில் ஒரு தேர்வுச் சபையின் முன் குறிப்பிட்ட இடத்திலும், தேதியிலும் நேரத்திலும் தோற்றவேண்டுமென்று அறிவுறுத்தப்படுவர்.

23. பிரவேச தேர்வுப் பரீட்சைச் சபையினால் உகந்தவரெனக் கருதப்பட்ட அபேட்சகர்கள், விமானப் படையினரால் வைத்திய பரிசோதனை செய்யப்படுவார்கள். அத்துடன் இறுதி தேர்வுச் சபைக்கு முன், தியத்தலாவையிலுள்ள இலங்கை அரசவிமானப்படையில் உத்தியோகத்தருக்கான தன்மைப் பரீட்சைகளுக்கு ஆளாகுமாறு கோரப்படுவார்கள்.

24. பாதுகாப்பு வெளிநாட்டு விவகார அமைச்சினால் நியமிக்கப்பட்ட சபையொன்றினால், இறுதித் தேர்வு நடைபெறும். தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் சபையினால் அறிவிக்கப்படுவார்கள். அவர்கள் பொறுப்பேற்க வேண்டிய அண்ணளவான தேதியும் அவர்களுக்கு அறிவிக்கப்படும்.

ஈ. ஆர். அமரசேகர,
விமான உதவி படைத்துறை மீயுயர் அலுவலர்,
விமானப்படை ஏவுநர்.

விமானப்படைத் தலைமை அலுவலகம்,
இலங்கை அரசாங்க விமானப்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு,
1970 ம் ஆண்டு ஏப்பிறல் மீ 24 ந் வ.

### பின்னிணைப்பு " அ "

## இலங்கை அரச வான்படையின் ........... பிரிவில் ...........ஆணைப் பதவிக்கான விண்ணப்பம்

(விண்ணப்பம் செய்யும் கிளையின் பெயரை எழுதவும்)

1. குடும்பப்பெயர் : ———.
வேறு பெயர்கள் :———.

2. தற்போதைய முகவரி : ———.
(i) தொலைபேசி எண் : ———.
(ii) அணித்தாயுள்ள புகையிரத நிலையம் : ———.
(iii) அணித்தாயுள்ள பொலிசு நிலையம் : ———.
(iv) தந்தி நிலையம் : ———.

3. நிரந்தர வதிவிடம் : ———.
இங்கு வாழ்ந்துவந்த காலம் : ———.

4. விவாக நிலை : ———.

5. சமயம் : ———.

6. பெற்றோர் விபரம் :
(அ) தந்தையின் பெயர் : ———.
பிறப்பிடம் : ———.
பிறப்பின்போது குடிமை : ———.
(ஆ) தாயின் பெயர் : ———.
பிறப்பிடம் : ———.
பிறப்பின்போது குடிமை : ———.

7. பள்ளிக்கூட, பல்கலைக்கழக வாழ்க்கை விபரங்கள் :
(அ) பள்ளிக்கூடத்தின் பெயரும் பிறவும் : ———.
(ஆ) சேர்ந்த திகதி ———.
(இ) விலகிய திகதி : ———.

8. பள்ளிக்கூடம் விலகிய நாட்தொடக்கம் செய்த தொழில் விபரம் ———.
(முழு விபரம் தருதல் வேண்டும்)
(அ) தொழில் கொடுத்தவரின் பெயர் : ———.
(ஆ) தொழிலின் தன்மை : ———.
(இ) தொழிலிலமர்ந்த காலம் : ———.

9. இதற்கு முன்பு எப்போதாவது படைச்சேவை ஏதாவதொன்றில் ஏதாவதோர் பதவிக்கெனப் நேர்முகப் பரீட்சை செய்யப்பட்டீரா? உமது விடை " ஆம் " எனின் விண்ணப்பித்த பதவிகளின் விபரத்தையும் திகதியையும் தரவும் : ———.

10. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தின் குற்றத்தீர்ப்புக்கு உட்பட்டீரா ? உமது விடை " ஆம் " எனின் விபரம் தருக :———

11. இவ்வறிவித்தலின் 14 ஆம் பந்தியில் தேவையென வேண்டப்பெற்ற தகைமைகள் : ———.

12. பிறந்த திகதி : ———. வயது : ———. பிறப்பிடம் ———. குடிமை : ———. பிறப்பின்போது : ——— தற்சமயம் : ———.
(அ) தகுதி : ———.
(ஆ) உமது கல்வித் தகைமை : ———.
(அதாவது—நீர் தகைமைபெறும் 12 ஆம் பந்தியின் வாசகம்)
(இ) உயரம் : அடி : ———. அங் : ———.
(ஈ) மார்பு : அங் : ———.
(உ) நிறை : இரு : ———.
மேலதிக தகைமைகள் (விண்ணப்பகாரர்கள் பின்வரும் கூடுகளிற் செய்யும் கோரிக்கைகளை உறுதிப்படுத்தக் கூடியவர்களாகவிருத்தல் வேண்டும்) :———.

13. விளையாட்டுகளில் ஈட்டிய சாதனை விபரங்கள் : ———.
(குழுமங்கள், போட்டிகள் பற்றிய விபரங்களையும் ஈட்டிய தராதரங்களையும் திகதிகளுடன் தருக) :———.

14. பள்ளிக்கூடத்தில் அல்லது பல்கலைக்கழகத்தில் ஈட்டிய வேறு சாதனைகள் : ———.

15. ஏதாவது படைச்சேவையில், ஒழுங்கான அல்லது தொண்டர்படை அல்லது சாரணச் சிறுவர் அமைப்பில் ஆற்றிய சேவை விபரங்கள் :—

16. விசேட தகைமைகள்பற்றிய விபரங்கள் : ———.

17. இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளவைகள் (படிகள் மட்டுமே இணைக்கப்படுதல் வேண்டும்) : ———.

18. சான்றிதழ்கள் கொடுத்தவர்களின் பெயர் : ———.

19. இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட பிற சாதனங்கள் : ———

———,
(விண்ணப்பகாரரின் கையொப்பம்).

திகதி : ———.

4—827/1—24.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,903

## இலங்கை அரச வான்படை

### உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்கள்—வான்படைக்கள அமைத்தற் பிரிவு (வேலைச் சேவைகள்)

இலங்கை அரச வான் படையின் வான்படைக்கள் அமைத்தற் பிரிவின் (வேலைச் சேவைகள்) இரு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களுக்கு இரு ஆணைப் பதவி இலங்கை அரச வான்படையில் வழங்கப்படும். 13 ஆம் பந்தியின் கீழ் துணைப்பந்தி (சி) (i) தொடக்கம் (iii) வரை பட்டியற்படுத்தப்பட்ட கல்வித் தகைமைகளையுடைய வேட்பாளர்கள் வான் பிரதியாளர் ஆணைப் பதவியில் நியமனம் வழங்கப்படுவர். 13 ஆம் பந்தியின் கீழ் துணைப் பந்தி (சி) (iv) தொடக்கம் (vi) வரை பட்டியற்படுத்தப்பட்ட கல்வித் தகைமைகளையுடைய வேட்பாளர்கள் வழிகாட்டி உத்தியோகத்தர் பதவியில் நியமனம் வழங்கப்படுவர்.

3. வான்படைக்கள அமைப்புப் பிரிவின் ஓர் உத்தியோகத்தரின் கடமைகளாவன (எல்லா உத்தியோகத்தர்களினதும் நாளாந்தக் கடமைகள் நீங்கலாக) வான்படைக் களம் வான்படையால் பாவிக்கப்பட்டும் செயற்படுத்தப்பட்டும் வரும் கட்டடங்கள், சாலைகள் குடியிருக்கும் பிற புத்தமர்வுகள் போன்றவற்றை அமைத்தலும் பேணுதலுமாகும்.

4. தேவைக்கேற்ப தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர் இலங்கையிலோ வெளிநாட்டிலோ பயிற்சி மேற்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

**வேதனமும் படிகளும்***

5. வேதனமும் படிகளும் 1961 ஆம் ஆண்டின் வான்படை வேதனக் கோவையின்படி 1961 ஆண்டு ஏப்பிரில் மாதம் 28 ஆம் திகதி வெளி வந்த 12,395 ஆம் இலக்கத்திய இலங்கை கசற் பத்திரிகையில் உள்ளதைப் போன்றும், காலத்திற்குக் காலம் மாற்றி அமைப்பதைப் போன்றும் அமையும்.

(அ) பக்க முனைனர் பதவி வரையான உத்தியோகத்தர்களுக்கான அடிப்படை வேதனம் பின்வருமாறு :

வழிகாட்டி உத்தியோகத்தர்:—ஆண்டொன்றுக்கு ரூபா 4,500, பறத்தற் உத்தியோகத்தர் :

ஆண்டொன்றுக்கு ரூபா 4,860 ல் தொடங்கி ஆண்டொன்றுக்கு ரூபா 180 கொண்ட இரண்டு ஏற்றங்களின் மூலமும் ரூபா 360 கொண்ட ஒரு ஏற்றம் மூலமும் ரூபா 5,580 வரை செல்லும்.

பறத்தற் பிரதியாளர் :

ஆண்டொன்றுக்கு ரூபா 6,660 தொடங்கி ஆண்டுக்கு ரூபா 180 கொண்ட ஆறு ஏற்றங்களாக ஆண்டுக்கு ரூபா 7,740 வரை உயரும்.

சதுரணித் தலைவர் :

ஆண்டொன்றுக்கு ரூபா 8,820 தொடங்கி ஆண்டொன்றுக்கு ரூபா 180 கொண்ட ஆறு ஏற்றங்களாக ஆண்டுக்கு ரூபா 9,900 வரை உயரும்.

பக்க முனைனர் :

ஆண்டொன்றிற்கு ரூபா 12,105 தொடங்கி ஆண்டுக்கு ரூபா 225 கொண்ட ஆறு ஏற்றங்களாக ஆண்டுக்கு ரூபா 13,455 வரை உயரும்.

(ஆ) **கோலவுடைப்படி :** ஆணைப்பதவி வழங்கப்படும் சமயத்தில் வெப்ப மண்டல உடைக்கான படியாக ரூபா 650 வழங்கப்படும். சேவைக்கு அல்லது பயிற்சிக்கென வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டால் உடைப்படிக்கென மேலும், ரூபா 1,300 வழங்கப்படும். இரண்டு ஆண்டுகள் சேவை முடிந்தவிடத்து கோலவுடைகளைப் பேணுதலுக்கான படியாக மாதமொன்றுக்கு ரூபா 25 வழங்கப்படும்.

(இ) **பிறபடிகள் :** வாழ்க்கைச் செலவுப்படி, வாழ்க்கைச் சிறப்புப்படி, வாடகைப்படி யாவும் அரசாங்க வீதப்படி கொடுக்கப்படும்.

6. உபகாரச் சம்பளம்/பணிக்கொடை என்பன 1962 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆம் தேதி அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 13,301 இலக்க வான்படை உபகாரச் சம்பளமும் பணிக்கொடையினதும் கோவை 1962 க்கு ஏற்பவும் காலத்திற்குக் காலம் மாற்றப்படும் நியதிகளுக்கேற்பவும் வழங்கப்படும். அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமாக, உபகாரச் சம்பளம் பெறும் தொடர்ச்சியான சேவையில் அல்லது இலங்கையின் பாதுகாப்புப் படையில் முன்பு சேவை செய்திருந்தால் அல்லது பிரித்தானிய பொதுநல போர் சேவையில் இருந்திருப்பின் இவர் உபகாரச் சம்பளம் பெறுவதற்குரித்துடையவராவர்.

* திருத்தியமைத்தற்கான மேற்குறிப்பிட்ட வேதனம், உபகாரச் சம்பளம், பணிக்கொடை ஆகியன ஆராயப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

7. இலங்கை அரச வான்படை உத்தியோகத்தரின் சேவை நிபந்தனைகள் காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டனவும் 1951 ஆம் ஆண்டு ஏப்பிரில் 27 ஆம் தேதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 10,240 ஆம் இலக்க இலங்கை அரச வான்படை (ஒழுங்கானதும் ஒழுங்கான ஒதுக்கமும்) பிரமாணங்களின் படியாகும்.

8. மணம் முடிக்காத உத்தியோகத்தர் ஒருவர் உத்தியோகத்தர்களுக்கான உணவு அரங்கில் வசிப்பார் ; அங்கு வசிப்பிட வசதி, உணவு வேலையாளரின் சேவை என்பன அளிக்கப்படும்.

9. மணம் முடித்த உத்தியோகத்தருக்கு மணம் முடித்தவர்களுக்கான இருப்பிடமும் (கிடைக்கக்கூடியதாயிருப்பின்) கொடுத்துதவப்படும் ; அத்துடன் தனிப்பட்ட வேலையாளுக்குப் பதிலாக ஒரு படியும் வழங்கப்படும்.

10. வான்படை உத்தியோகத்தர்கள் எந்நேரத்திலும் உலகத்தின் எப்பாகத்திற்கும் கடமை புரிவதற்கு அல்லது பயிற்சிக்கென அனுப்பப்படுவதற்குரியவராவர்.

11. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செய்முறைப்படுத்துவதன் பொருட்டு 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க ஆட்சி மொழிச் செய்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செய்முறைப்படுத்துவதன் பொருட்டு ஏற்கனவே செய்யப்பட்ட ஏதாவது விதிகளுக்கு அல்லது இதன் பின் செய்யப்படும் விதிகளுக்கு அமைய நடக்குமாறு வேண்டப்படுவர்.

12. சேவைகளின் கைம்பெண், அனுதைகள் இளைப்பாற்றிச் சம்பளத்தின் பொருட்டு தமது அடிப்படைச் சம்பளத்திலிருந்து 4% கழிக்கப்படுவதற்கான சம்மதத்தைத் தெரிவிக்கும் வித்தத்தில் ஓர் கடிதம் கொடுக்கும்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர் வேண்டப்படுவர்.

**அடிப்படைத் தேவைகள்**

13. கீழ்வரும் தேவைகளை விண்ணப்பகாரர்கள் உடையவராயிருத்தல் வேண்டும் :—

(அ) நாட்டினம்—வேட்பாளர்கள் இலங்கைக் குடிகளாயிருத்தல் அவசியம்—

(i) பிறப்பினுலா, அல்லது

(ii) பதிவினுலா

(ஆ) வயது—வேட்பாளர்கள் 1970 ம் ஆண்டு யூலை 1 ம் அன்று 33 வயதுக்கு மேற்படாதவராயிருத்தல் வேண்டும் ;

(இ) கல்வி/உயர் தொழில்—வேட்பாளர்கள் கீழே தரப்பட்டுள்ள ஏதாவதொரு தகைமையுடையவரென்பதை நிரூபிக்கும் வகையில் நிறைவான அத்தாட்சி காட்ட வேண்டியவராவார்.

(i) ஏ.எம்.ஐ.சி.ஈ., ஏ.எம்.ஐ.ஈ.ஈ., அல்லது ஏ.எம்.ஐ.மெக்.ஈ., அல்லது

(ii) நன்கு மதிக்கப்பட்ட ஓர் பல்கலைக்கழகத்தின் எந்திரவியற் பட்டதாரியாயிருத்தல் வேண்டும்.

(iii) சித்திகரமான முறையில் ஏ.எம்.ஐ.சி.ஈ., ஏ.எம்.ஐ.ஈ.ஈ. அல்லது ஏ.எம்.ஐ.மெக்.ஈ. பாகம் I ம், II ம் (அல்லது பிரிவுகள் ஏ அல்லது பி) பரீட்சைகளுக்கான பயிற்சி மேற்கொண்டு சிவில் மின் அல்லது எந்திரவியல் எந்திரிகள் தாபனத்தால் அத்தாபனத்தின் III ஆம் பாகத்துக்கு (அல்லது சி பிரிவுக்கு) தோற்றுவதற்கு உத்தரவு அளிக்கப்பட்டவர் ; வேறு பிரத்தியேக தகைமைகள் அல்லது அனுபவம் உடையவராய் வேட்பாளர் இருப்பின் மேற்கூறிய தகைமைகளையுடைய வேட்பாளர்களுக்கு சலுகை காட்டப்படும்.

(iv) இலங்கைத் தொழினுட்பக் கல்லூரியில் சிவில், மின் அல்லது எந்திரவியலில டிப்புளோமா பெற்று 3 ஆண்டுகளுக்குக் குறையாமல் அரசாங்கத்தில் அல்லது மதிப்புப் பெற்ற எந்திரவியற் தாபனத்தில் அனுபவம் பெற்றவராயிருத்தல் வேண்டும் ;
அல்லது

(v) கனிட்ட தொழினுட்ப உத்தியோகச் சான்றிதழ் (சிவில்) அல்லது (எந்திரவியலும் மின்வலுவும்) பெற்று 5 ஆண்டுகளுக்குக் குறையாமல் பெரிய ஓர் அரசாங்கத் திணைக்களத்தின் கட்டட வேலையில் அல்லது நன்மதிப்புப் பெற்ற எந்திரவியற் தாபனத்தின் கட்டட வேலையில் வேலை அனுபவம் பெற்றவராயிருத்தல் வேண்டும் ;

(vi) எந்திரத் தொழிலில் ஈடுபாடுள்ள தாபனத்தின் கூட்டுப் பகுதி I (பிரிவு அ) சித்தியெய்தியவராயும் 5 ஆண்டு வேலை அனுபவம் அரசாங்க எந்திரவியல் வேலையில் அல்லது மதிப்புப் பெற்ற எந்திரவியற் தாபனத்தில் பெற்றவராயுமிருத்தல் வேண்டும் (மேலே சொல்லப் பெற்ற தொழினுட்பத் தகைமைகளுடன் சேர்த்து அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது மதிப்புப் பெற்ற எந்திரவியற் தாபனத்தின் வேலை அனுபவம் பெற்றவர்களுக்குப் பொதுத் தகுதியின்படி முன்னுரிமை அளிக்கப்படும்).

(ஈ) **மருத்துவ நியமம்.**—வான்படை மருத்துவ நியமங்களுக்கு வேட்பாளர்கள் அமைந்திருத்தல் வேண்டும். (ஆகக்குறைந்த உயரம் 5 அடி, 5 அங்; மார்பு 32 அங்குலம்; நிறை 105 இருத்தல்).

**விண்ணப்பகாரர்களுக்கான அறிவுறுத்தல்**

14. இவ்வறிவித்தலின் பின்னிணைப்பு " அ " யில் உள்ள படிவத்திலேயே விண்ணப்பங்கள் யாவும் செய்யப்படவேண்டும். அச்சிடப்பெற்ற விண்ணப்பப் படிவங்கள் கிடையா. விண்ணப்பகாரர்களே தமது விண்ணப்பப் படிவத்தை தயாரித்தல் வேண்டும். இதற்கெனக் குறிப்பிடப் பட்ட படிவத்திற்கியைய அமையாத விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப் படும்.

15. விண்ணப்பங்கள் யாவும் " வான்படைத் தளபதி, த. பெ. எண் 594, கொழும்பு " என முகவரியிடப்பட்டுக் கடித உறையின் இடதுபக்க மூலையில் " விண்ணப்பம்—வானூர்தித் தள அமைப்புக்கிளை—உத்தியோகத்தர் " என எழுதப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 1970 ஆம் ஆண்டு மே 19 ம் தேதி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

16. 12 ஆம் பந்தியில் உள்ளதைப் போன்று வேட்பாளர்கள் தகைமைகளில்லாதிருப்பின் எக்காரணத்தைக் கொண்டும் விண்ணப்பங்கள் கருதப்படமாட்டா.

17. விண்ணப்பத்துடன் சேர்த்தனுப்ப வேண்டிய பிரதிகள் :—

(அ) விண்ணப்பகாரரின் பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) உயர் கல்விச் சான்றிதழ்/பெற்ற உயர் தொழிற் தகைமைச் சான்றிதழ் ;

(இ) விண்ணப்பகாரருடன் நெருங்கிப் பழகிய இரண்டு பொறுப்பு வாய்ந்தவர்களிடம் பெற்ற சான்றிதழ் ;

(ஈ) விண்ணப்பத்தில் செய்யப்பட்ட கோரிக்கைகளை ஆதரிக்கும் வகையில் சான்றிதழ்கள்.

18. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் யாவும் திணைக்களத்தின் தலைவரூடாக, அவ்வுத்தியோகத்தர் தேர்ந்தெடுக்கப்படின் விடுவிக்கப்படுவாரா எனக் குறிப்பிட்டு, அனுப்பப் படுதல் வேண்டும்.

**தெரிவு, நேர்முகப்பரீட்சை போன்றவை**

19. பொருத்தமுடையவரெனக் காணப்படும் வேட்பாளர் ஒரு தெரிவுச் சபைமுன் அவரது சொந்தச் செலவில் தோன்றும்படி அறிவுறுத்தப் படுவர்.

20. தொடக்கத் தெரிவுச் சபையினால் பொருத்தமெனக் காணப்படும் வேட்பாளர்கள் வான்படையினால் மருத்துவச் சோதனைக்குட்படுத்தப் படுவர். உத்தியோகத்தர் முடிவான தெரிவுச்சபை முன் போவதற்கு முன் தம்மைச் சோதனைக்கும் உட்படுத்தப்படுவர்.

ஈ. ஆர். அமரசேகரா,
வான்துணைத் தளபதி,
வான்படை ஏவுநர்.

வான்படைத் தலைமை நிலையம், த. பெ. எண். 594,
கொழும்பு
1970 ம் ஆண்டு ஏப்பிறல் மீ 24 ந் உ.

**பின்னிணைப்பு " அ "**

இலங்கை அரச வான்படையின்............பிரிவில்...............
ஆணைப்பதவிக்கான விண்ணப்பம்

(விண்ணப்பம் செய்யும் கிளையின் பெயரை எழுதவும்)

1. குடும்பப் பெயர் :————.
வேறு பெயர்கள் :————.

2. தற்போதைய முகவரி :————.
(i) தொலைபேசி எண் :————.
(ii) அணித்தாயுள்ள புகையிரத நிலையம் :————.
(iii) அணித்தாயுள்ள பொலிசு நிலையம் :————.
(iv) தந்தி நிலையம் :————.

3. நிரந்தர வதிவிடம் :————.
(இங்கு வாழ்ந்துவந்த காலம்) :————.

4. விவாக நிலை :————.

5. சமயம் :————.

6. பெற்றோர் விபரம்—
(அ) தந்தையின் பெயர் :————.
பிறப்பிடம் :————.
பிறப்பின்போது குடிமை :————.

(ஆ) தாயின் பெயர் :————.
பிறப்பிடம் :————.
பிறப்பின்போது குடிமை :————.

7. பள்ளிக்கூட, பல்கலைக்கழக வாழ்க்கை விபரங்கள்—
(அ) பள்ளிக்கூடத்தின் பெயரும் பிறவும் :————.
(ஆ) சேர்ந்த திகதி :————.
(இ) விலகிய திகதி :————.

8. பள்ளிக்கூடம் விலகிய நாட்தொடக்கம் செய்த தொழில் விபரம்—
(முழு விபரம் தருதல் வேண்டும்)
(அ) தொழில் கொடுத்தவரின் பெயர் :————.
(ஆ) தொழிலின் தன்மை :————.
(இ) தொழிலிலமர்ந்த காலம் :————.

9. இதற்கு முன்பு எப்போதாவது படைச்சேவை ஏதாவதொன்றில் ஏதாவதோர் பதவிக்கென நேர்முகப் பரீட்சை செய்யப்பட்டீரா? உமது விடை " ஆம் " எனின் விண்ணப்பித்த பதவிகளின் விபரத்தையும் திகதியையும் தரவும் :————.

10. சிவில் அல்லது இராணுவ நீதி மன்றத்தின் குற்றத்தீர்ப்புக்கு உட்பட்டீரா? உமது விடை " ஆம் " எனின் விபரம் தருக :————.

11. இவ்வறிவித்தலின் 13 ஆம் பந்தியில் தேவையென வேண்டப்பெற்ற தகைமைகள் :————.

12. பிறந்த திகதி :————.
வயது :————.
பிறப்பிடம் :————.
குடிமை :————.
பிறபபின்போது :————.
தற்சமயம் :————.
(அ) தகுதி :————.
(ஆ) உமது கல்வித் தகைமை :————.
(அதாவது—நீர் தகைமை பெறும் 12 ஆம் பந்தியில் வாசகம்)
(இ) உயரம் :————. அடி :————. அங் :————.
(ஈ) மார்பு :————. அங் :————.
(உ) நிறை :————. இரு :————.
மேலதிக தகைமைகள் (விண்ணப்பகாரர்கள் பின்வரும் கூடுகளிற் செய்யும் கோரிக்கைகளை உறுதிப்படுத்தக் கூடியவர்களாகவிருத்தல் வேண்டும்.)

13. விளையாட்டுகளில் ஈட்டிய சாதனை விபரங்கள் :————.
(குழுமங்கள், போட்டிகள் பற்றிய விபரங்களையும் ஈட்டிய தராதரங்களையும் திகதிகளுடன் தருக)

14. பள்ளிக்கூடத்தில் அல்லது பல்கலைக்கழகத்தில் ஈட்டிய வேறு சாதனைகள் :————.

15. ஏதாவது படைச்சேவையில், ஒழுங்கான அல்லது தொண்டர்படை அல்லது சாரணச்சிறுவர் அமைப்பில் ஆற்றிய சேவை விபரங்கள் :————.

16. விசேட தகைமைகள் பற்றிய விபரங்கள் :————.

17. இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளவைகள் (படிகள் மட்டுமே இணைக்கப்படுதல் வேண்டும்) :————.

18. சான்றிதழ்கள் கொடுத்தவர்கள் பெயர் :————.

19. இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட பிற சாதனங்கள் :————.

————.
திகதி :————. விண்ணப்பகாரரின் கையொப்பம்.

4—827/2—24.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,903

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கல்முனை உபபிரிவு

பின்வரும் வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் கிழக்குப் பிரிவு, மட்டக்களப்பு பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் 1970 ம் ஆண்டு மே மாதம் 7 ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு இதே தினத்தன்று காலை 10.05 மணிக்குத் திறக்கப்படும்.

| வேலை விபரம் | பதிவுத் தொகை ரூபா | பதிவுக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| கல்முனை உப பிரிவின் கல்லோயா இடப் புறவாய்க்கா காலின் நெல்லுச்சேனைக் காண்டத்துக்கு நன்மை பயப்பதற்காக சில்லிக்கொடி ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்துத் தரல் | 22,000.. | 50 |
| கல்முனை உபபிரிவின் கல்லோயா இடப்புற வாய்க்கா லின் அலியார் வெட்டைக் காண்டத்துக்கு நன்மை பயப்பதற்காக நாவற்கிரி ஆற்றின் குறுக்கே அணைக் கட்டு அமைத்தத் தரல் | 43,000.. | 50 |

அவ்வவ் வேலைக்கு எதிரே காட்டப்பட்ட அல்லது அவைக்கு மேற்பட்ட தொகைக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதியப்பட்டுள்ள ஒப்பந்தக் காரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராமாபிவிருத்திச் சங்கங்கள் மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

கேள்விப் பத்திரங்கள் கல்முனை, அம்பாரை, செங்கலடி உபநீர்ப்பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1970 ம் ஆண்டு மே மாதம் 3 ம் திகதி பி.ப. 4.00 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம். இப் படிவங்களின் இரு பிரதிகளில் கேள்விப்பத்திரங்கள் அனுப்பிவைக்கப் படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது தனது பதிவுப் புத்தகத்துடன் தான் மேற்கொண்டுள்ள வேலைகளையும் அவற்றின் பெறுமதிகளையும் வெளிப்படுத்துதல் வேண்டும். இவை அவ் ஒப்பந்தக்காரர் கேள்விப் பத்திரம் வழங்கத் தகுதியானவரா என்பதைத் தீர்மானிக்க ஏதுவாயிருக்கும். கேள்விப் பத்திரங்கள் பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது இதற்கென மட்டக்களப்புப் பெரும் பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இக்கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்கள் வேண்டின் கல்முனை உப பிரிவு நீர்ப்பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளவும். கேள்வி ஏற்கப்பட்டவுடனேயே வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 1970 ம் ஆண்டு ஒக்ரோபர் 31 ம் திகதிக்கு முன்னர் வேலைகள் பூர்த்தியாக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு வார அல்லது வாரத்தின் ஒரு பகுதித் தாமதத்திற்கும் பொருந்திய நட்டமாக ரூபா 50 அறவிடப் படும்.

சி. சண்முகராசா,
நீர்ப்பாசனப் பொறிவலாளர்.

நீர்ப்பாசன அலுவலகம்,
கல்முனை,
1970 ம் ஆண்டு ஏப்ரல் மீ 9 ந் உ.

4–634—24.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,903

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### உக்குவெல

மகாவலித்திட்ட பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்களால் உக்குவெலயில் இரண்டு தற்காலிக வீடுகள் கட்டுவதற்கு கேள்விப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு வைகாசி மாதம் 6 ம திகதி காலை 10.00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

நீர்ப்பாசன திணைக்களத்துடன் ரூபா 23,000/- (இருபத்துமூவாயிரம்) ரூபாய்க்கும் அதற்கு மேலும் பதிவுள்ள ஒப்பந்தக்காரர்கள் மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்க தகுதியுடையவர்கள்.

இரண்டு பத்திரங்களில் கேள்விகள் அனுப்பவேண்டும். இவ்வெற்றுப் பத்திரங்கள், உக்குவெல, பொல்கொல்ல, மாத்தளை, போவதத்தன்ன முதலிய நீர்ப்பாசன உப-பிரிவு அலுவலகங்களில் கந்தோர் நேரங்களில் 18.4.70 தொடக்கம் 2.5.70 வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வியாளராக வருவோர் இத்திணைக்களத்தில் மேலும் விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரம் பெறவருவோர் பதிவுப் புத்தகம் கொண்டுவர வேண்டும். அத்துடன் வேலையின் முன்னேற்றம் முதலியவற்றையும் காண்பிக்கவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் பெற வருவோர் ஒரு கச்சேரியில் ரூபா 25.00 கட்டுப்பணம் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டைக் காண்பிக்க வேண்டும்.

கே. பாலரத்தினம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
உக்குவெல.

நீர்ப்பாசன அலுவலகம்,
உக்குவெல,
1970 ம் ஆண்டு ஏப்றில் மீ 11 ந் உ.

4–711—24.4.70 ந் திகதிய வர்த்தமானி இ. 14,903

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### கேள்விப்பத்திர அறிவித்தல்

கொழும்பு 5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1970 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 25 ஆம் தேதி மு. ப. 10.00 மணிவரை, பொறியியல கருவிகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ளுவார்.

1970 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 24 ஆம் தேதியன்று நண்பகல் 12.00 மணிவரை, எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடியதான பத்திரங்களில் கேள்விகள் அனுப்பப்படவேண்டும். கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இ. போ. ச. பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 100ஐக் காசாகக் கட்டி, இதன் பற்றுச்சீட்டை கேள்விப்பத்திரங்கள் வழங்கு வதற்காக எனது அலுவலகத்தில் காட்டவேண்டும். மேலதிக விபரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம வினியோக உத்தியோகத்தர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு 5.

4–674—24.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,903

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### அம்பாறை உபபகுதி

பின்வரும் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் மட்டக்களப்புப் பெரும்பாக நீர்ப்பாசனப் பிரிவுக் கேள்விப்பத்திரச் சபைத்தலைவர் அவர்களால் 1970 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 30 ந் திகதி சனிக் கிழமை காலை 10.00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும்.

2. அவ்வவ்வேலைக்கு எதிரே காட்டப்பட்டுள்ள அல்லது அவைக்கு மேற்பட்ட தொகைக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதியப்பட்டுள்ள கொந்தராத்துக்காரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராமாபிவிருத்திச் சங்கங் கள் மாத்திரமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகைமையுடையவ ராவர்.

| கேள்வி இல. | வேலை விபரம் | பதிவுத் தொகை ரூபா | கேள்விப் பத்திரக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|
| அ/2/69/70 | அம்பாறை உப பிரிவு ஆற்றுப் பிரதேசத்தில் பலுக்கம் பிட்டி அணைக்கட்டு அமைத் துத் தரல் .. | 80,000 .. | 100 |

3. கேள்விப்பத்திரங்கள் அம்பாறை, கல்முனை அல்லது செங்கலடி உப நீர்ப்பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1970 ம் ஆண்டு வைகாசி மாதம் 25 ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருபவர் தமது பதிவுப் புத்தகத்துடன் இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலை விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தல் வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர் கேள்விப்பத்திரம் அனுப்பலாமா என்பதை அறிய ஏதுவாய் இருக்கும். வெற்றுப்பத்திரம் வழங்குமுன் மேற்காட்டிய நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஒருவரின் காரியாலயத்திலோ அல்லது கச்சேரியிலோ மேற்காட்டிய கேள்விப்பத்திரக் கட்டணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டல் வேண்டும்.

4. இக்கேள்விகளுக்கான மேலதிக விபரங்களை அம்பாறை உப நீர்ப்பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

என். ஜி. தாமோதரம்,
பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கிழக்குப் பிராந்தியம்.

நீர்ப்பாசன அலுவலகம்,
மட்டக்களப்பு.
1970 ம் ௵ ஏப்ரல் ௴ 8 ந வ.

4–695—24.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,903

---

## கட்டிடங்கள் திணைக்களம்

யாழ்ப்பாணம் அரசினர் பெரிய ஆஸ்பத்திரி இரத்த வங்கி கட்டிடத்தை சத்திர வைத்திய அரங்காகத் திருத்தங்கள் செய்து மாற்றி அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் கட்டிடங்கள் திணைக்களம் வடபகுதி கண்காணிப்புப் பொறியியலாளர் காரியாலய கேள்விச்சபையின் தலைவரால் 1970 ஆம் ஆண்டு மே மாதம் 16 ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கட்டிடங்கள் திணைக்கள யாழ்ப்பாண மாவட்ட நிறைவேற்றுப் பொறிவலாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரங்களில், இணைபடிவமாக கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வேண்டிய இதர விபரங்களை மேற்படி பொறிவலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். குறிக்கப்பட்ட வேலைக்கான நிர்மாண வடிவங்களைப் அப்பொறிவலாளரின் அலுவலகத்தில் பார்வையிடக் கூடியதாகவிருக்கும்.

3. பொதுவேலைத் திணைக்களத்தில் ரூபா 8,400 க்கும் குறையாத கட்டிட நிர்மாணத்திற்கென பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டும், அவர்கள் கேள்விக்கட்டணமாக ரூபா 25 செலுத்திய பற்றுச்சீட்டை 1970 ஆம் ஆண்டு மே மாதம் 8 ந் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 4.30 மணிக்கு முன்னதாக மேலே குறிப்பிட்ட பொறிவலாளரின் பார்வைக்குக் காட்டுவதன் பின்னரே கேள்விப்பத்திரங்களை பெறுவதற்குத் தகுதி பெறுவர்.

குறித்த காலத்திற்குப் பின்னர் கேள்விப்பத்திரங்களை பெறவிரும்புவர்கள் தாமதமாகும் ஒரு நாளுக்கோ அல்லது ஒரு நாளின் பகுதிக்கோ ரூபா 10 வீதம் மீளளிப்புச்செய்யப்படாத தாமதக் கட்டணத்தை மேலே குறிப்பிட்ட பொறிவலாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெறுவதன் பேரில் கேள்விப்பத்திரங்களை பெறக்கூடியவராவர்.

4. கேள்வியாளராக முன்வரும் ஒவ்வொரு விண்ணப்பகாரரும் கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னதாக தம் ஒப்பந்தகாரப் பதிவுப் புத்தகத்தையோ அல்லது தகுதி காண் கடிதத்தையோ குறிப்பிட்ட பொறிவலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்களுக்குரிய கட்டணத்தை கொழும்பு கோட்டையிலுள்ள கட்டிடங்கள் திணைக்களத்திலோ தவிர்ந்த இடங்களிலுள்ள கச்சேரிகளிலோ கட்டலாம்.

தெ. மாணிக்கம்,
கண்காணிப்பு பொறிவலாளர்,
வடபகுதி (கட்டிடங்கள்).

கண்காணிப்பு பொறிவலாளர் அலுவலகம், வடபகுதி,
கட்டிடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்,
1970 ம் ௵ ஏப்பிரல் ௴ 16 ந வ.

4—798—24.4.70 ந் திகதிய வர்த்தமனி இல. 14,903

---

# கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

5.1.70 அன்று முடிவடைந்த 22½″ × 35″/50–52 ஜீஎஸ்எம் தாள்களிலுள்ள நிறப் பத்திரிகைக் கடதாசியின் கேள்விப்பத்திர முடிவுகள்.

| சித்தியடைந்த கேள்விப் பத்திரிகாரர் | கட்டளையிடப்பட்ட தொகை | விலை கொ. வி மற்றும் க. கே நீ/தொன் ஒன்றிற்கு | எந்த நாட்டின் உற்பத்தி |
|---|---|---|---|
| மெசர்ஸ் வில்பிரைட் ஹெயின்செல் | 50 நீ/தொன் .. | ரூபா 1469.70 கொ. வி. மற்றும் க. கே. சிகப்பு நிறத்திற்கு .. | அவுஸ்திரியா |
| | | ரூபா 1398.28 கொ. வி. மற்றும் க. கே. ஏனைய நிறங்களிற்கு | |

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2, 1970 ந் ௵ மார்ச்சு ௴ 25 ந வ.

இ. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர், கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

4–760/1—24.4.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,903

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### 21.8.69 அன்று முடிவடைந்த கடதாசி மற்றும் கடதாசி அட்டைகளிற்கான கேள்விப் பத்திர முடிபுகள்

| விடய இல. | விபரம் | கேள்விப்பத்திரகாரரின் எண்ணிக்கை | சித்தியடைந்த கேள்விப் பத்திரகாரர் | கட்டளையிடப்பட்ட தொகை | விலை கொ. வி. மற்றும் க. கே.நீ/தொன் ஒன்றிற் ரூ. ச. | எந்த நாட்டின் உற்பத்தி |
|---|---|---|---|---|---|---|
| 1. | கறுப்பு காட்றிங் | | | | | |
| | 29″ × 45″/81 ஜிஎஸ்எம்/75இரு/500 தாள்கள் | 15 | விபாட் அன் ஸ்மித்ஸ் லிமிடெட், ஐ. இ. | 20 நீ/தொ | 1569.46 | ஐ. இ. |
| 2. | நிற மணிபோல்ட் பாங் | | | | | |
| | 18″ × 23″/31 ஜிஎஸ்எம்/9இரு/500 தாள்கள் (நீலம்) | 35 | எவ். ஈ. எக்ஸ்போட் லிமிடெட், ஐ. இ. | 10 நீ/தொ | 2185.67 | யூகோசிலேவியா |
| | 18″ × 23″/31 ஜிஎஸ்எம்/9இரு/500 தாள்கள் (மஞ்சல்) | | ஷை | 10 நீ/தொ | 2185.67 | ஷை |
| | 18″ × 23″/31 ஜிஎஸ்எம்/9இரு/500 தாள்கள் (இளஞ்சிவப்பு) | | ஷை | 10 நீ/தொ | 2185.67 | ஷை |
| | 18″ × 23″/31 ஜிஎஸ்எம்/9இரு/500 தாள்கள் (பச்சை) | | ஷை | 10 நீ/தொ | 2185.67 | ஷை |
| | 18″ × 23″/31 ஜிஎஸ்எம்/9இரு/500 தாள்கள் (மங்கிய பொன்னிறம்) | | ஷை | 20 நீ/தொ | 2185.67 | ஷை |
| 3. | லினென் முதப்புடைய தவர் கடதாசி | | | | | |
| | 18″ × 23″/136 ஜிஎஸ்எம்/40 இரு/ 500 தாள்கள் (நீலம்) | கட்டளையிடப் படவில்லை | | | | |
| | 18″ × 23″/136 ஜிஎஸ்எம்/40 இரு/ 500 தாள்கள் (பச்சை) | கட்டளையிடப் படவில்லை | | | | |
| | 18″ × 23″/136 ஜிஎஸ்எம்/40 இரு/ 500 தாள்கள் (சாமோஸ்) | கட்டளையிடப் படவில்லை | | | | |
| | 18″ × 23″/136 ஜிஎஸ்எம்/40 இரு/ 500 தாள்கள் (இளஞ்சிகப்பு) | கட்டளையிடப் படவில்லை | | | | |
| 4. | நிற பிறிஸ்டல் அட்டை | | | | | |
| | 20″ × 25″/211 ஜிஎஸ்எம்/15 இரு/ 100 தாள்கள் (இளஞ்சிகப்பு) | 37 | கற்ரோ அன் கோ லிமிடெட், ஜப்பான் | 10 நீ/தொ | 1588.35 | ஜப்பான் |
| | 20″ × 25″/211 ஜிஎஸ்எம்/15 இரு/ 100 தாள்கள் (பச்சை) | | ஷை | 10 நீ/தொ | 1588.35 | ஷை |
| | 20″ × 25″/211 ஜிஎஸ்எம்/15 இரு/ 100 தாள்கள் (நீலம்) | | ஷை | 10 நீ/தொ | 1588.35 | ஷை |
| | 20″ × 25″/211 ஜிஎஸ்எம்/15 இரு/ 100 தாள்கள் (செம்பொன்) | | ஷை | 10 நீ/தொ | 1588.35 | ஷை |
| | 20″ × 25″/211 ஜிஎஸ்எம்/15 இரு/ 100 தாள்கள் (மங்கலான மஞ்சள்) | | ஷை | 10 நீ/தொ | 1588.35 | ஷை |
| 5. | எம்போஸ்ட் ஐவரி அட்டை (4 வண்ணமாதிரி) | | | | | |
| | 20″ × 30″/211 ஜிஎஸ்எம்/90 இரு/ 500 தாள்கள் | 21 | ஸ்ரோம் அன் புல் லிமிடெட், நோர்வே | 8 நீ/தொ | 2608.40 | நோர்வே |

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ், கொழும்பு–2,
25 மார்சு, 1970.

4–760/2—1970.4.24 ந் திகதிய வர்த்தமானி இல. 14,903

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## பகிரங்க ஏலம்

### உபயோகிக்கத்தகாத பம்பிகளும் துளைக்கருவிகளும்

கொழும்பு 5, ஜாவத்தை வீதியிலுள்ள துளையிடும் களஞ்சியத்தில் கூறு 34 இல் இருக்கும் உபயோகிக்கத்தகாத பம்பிகளும் (நீர்க் குழாய்கள்) துளைகருவிகளும் 16.5.70 திகதி முற்பகல் 10.00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். இவற்றை விலைகோருவோர், கொழும்பு 5, ஜாவத்தை வீதியிலுள்ள நீரியற் பரிசோதனைசாலை நீர்ப்பாசனப் பொறியியலாளருடன் ஏற்பாடுசெய்து, போயாமுன் தினங்களைத் தவிர்ந்த ஏனைய சாதாரண அலுவலக நாட்களில் மு. ப. 9.00 மணிக்கும் 11.30 மணிக்குமிடையிலும் பி. ப. 1.00 மணிக்கும் 3 மணிக்குமிடையிலும் இக்கருவிகளைப் பார்வையிடலமாம்.

2. விலை கோரி வெற்றிபெறுபவர் தாம் கோரிய தொகையின் 10 சதவிகிதத்தை உடனுக்குடனே செலுத்துதல் வேண்டும். மிகுதிப் பணத்தை ஏலம் நடைபெற்ற நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் செலுத்தி பொருட்களை அவ்விடத்திலிருந்து அகற்றவேண்டும். பொறிகளின் கருவிகளுக்கான முழுத் தொகையையும் விதிக்கப்பட்ட தவணைக்குள் செலுத்தி அவற்றை அகற்றுவிடின் விலை கோரி வெற்றி பெற்றவரால் ஏற்கனவே செலுத்திய கட்டுப்பணம் முடிக்குரியதாவதுடன் இவைகள்யாவும் விற்கப்படும்.

ரி. திருச்சிற்றம்பலம்,
நீர்ப்பாசன அதிபருக்காக.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
பௌத்தலோக மாவத்தை,
கொழும்பு 7, 1970 ந் ஆடு மார்ச்சு மீ 20 ந உ.

**துளைகருவிகள் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | துளைகருவி சுலிவர்ன் இல. 12 ஈ 2 திருகாணி அமைப்பு .. | ஐடீடீடீ | 1201 |
| 2. | டிை டிை | ஐடீடீடீ | 1202 |
| 3. | துளைகருவி சுலிவான் இல. 2 நீரியற் .. | ஐடீடீடீ | 1203 |
| 4. | சாதாரண இருவகை இயக்கப்பம்பியுடனும் நீரியற் சுழல்மூட்டுத் தலைப்புடனும் இணைந்த துளைகருவி சுலிவான் மேல்மட்ட உள்ளகம் இல. 7 .. | டீ | 1204 |
| 5. | டிை டிை .. | டீ | 1205 |
| 6. | டிை டிை .. | டீ | 1207 |
| 7. | டிை டிை .. | டீ | 1208 |
| 8. | வைரக்கல் துளைகருவி—சீபீ 8 .. | டீ | 1209 |

**பம்பிகள் :**

| | | | |
|---|---|---|---|
| 9. | இரட்டை உருளை நோவா பம்பி .. | பீ | 1006 |
| 10 | டிை டிை .. | பீ | 1007 |
| 11. | டிை டிை .. | பீ | 1008 |
| 12. | டிை டிை .. | பீ | 1009 |
| 13. | டிை டிை .. | பீ | 1013 |
| 14. | டிை டிை .. | பீ | 1014 |
| 15. | டிை டிை .. | பீ | 1011 |
| 16. | நோவா பம்பி—ஒற்றை உருளை .. | பீ | 1012 |
| 17. | பம்பி புஸாகொட் (Pump Buzzacott) .. | பீ | 1004 |
| 18. | டிை டிை .. | பீ | 1005 |

4–748/1—24.4.1970 ந் திகதிய வர்த்தமானி இல. 14,903

---

## பகிரங்க ஏலம்

### உபயோகிக்கத்தகாத இயந்திரச் சேர்க்கையும் பொறித்தொகுதியும்

இரத்மலானை, நீர்ப்பாசனத் திணைக்கள இயந்திரக் கிளையின் வேலைத்தளத்தில இருக்கும் உபயோகிக்கத்தகாத இயந்திரச் சேர்க்கையும் பொறித் தொகுதியும் 23.5.70 திகதி முற்பகல் 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். இவற்றை விலைகோர விரும்புவோர் இரத்மலானை, இயந்திரக் கிளையின் பிரதான பொறியியலாளருடன் ஏற்பாடு செய்துகொண்டு, போயா முன் தினங்களைத் தவிர்ந்த ஏனைய சாதாரண நாட்களில் மு. ப. 9.00 மணிக்கும் 11.30 மணிக்குமிடையிலும் பி. ப. 1.00 மணிக்கும் 3 மணிக்குமிடையிலும் இச்சாதனங்களைப் பார்வையிடலாம்.

2. விலை கோரி வெற்றிபெறுபவர் தாம் கோரிய தொகையின் 10 சதவிகிதத்தை உடனுக்குடனே செலுத்துதல் வேண்டும். மிகுதிப் பணத்தை ஏலம் நடைபெற்ற நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் செலுத்தி சாதனங்களை அவ்விடத்திலிருந்து அகற்ற வேண்டும். பொறிகளின் கருவிகளுக்கான முழுத் தொகையையும் விதிக்கப்பட்ட தவணைக்குள் செலுத்தி அவற்றை அகற்றுவிடின் விலை கோரி வெற்றிபெற்றவரால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கட்டுப்பணம் முடிக்குரியதாவதுடன் இவைகள் யாவும் விற்கப்படும்.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
பௌத்தலோக மாவத்தை, கொழும்பு 7,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 20 ந் உ.

ரி. திருச்சிற்றம்பலம்,
நீர்ப்பாசன அதிபருக்காக.

| விடயம் | விபரம் | கொள்ளளவு | | திணைக்கள இலக்கம் |
|---|---|---|---|---|
| **நிலச் செதுக்கிகள் :** | | | | |
| 1 .. | புசைரஸ் ஐர் எஸ் 152 .. | 15/18 கன யார் | .. .. .. | ஐடீபீஎஸ் 4 |
| 2 .. | டிை .. | டிை | .. .. .. | ஐடீபீஎஸ் 5 |
| 3 .. | டிை .. | டிை | .. .. .. | ஐடீபீஎஸ் 6 |
| 4 .. | உவுல்றிட்ஜ் பீபீ/120 .. | 12/14 கன யார் | .. .. .. | ஐடீபீஎஸ் 50 (1சீவ் பீ189 உடன்) |
| 5 .. | டிை .. | டிை | .. .. | ஐடீபீஎஸ் 51 ,, |
| 6 .. | டிை .. | டிை | .. .. .. | ஐடீபீஎஸ் 52 ,, |
| 7 .. | டிை .. | டிை | .. .. | ஐடீபீஎஸ் 53 ,, |
| 8 .. | டிை .. | டிை | .. .. .. | ஐடீபீஎஸ் 64 ,, |
| **இயந்திர மண்தூக்கிகள் :** | | | | |
| 9 .. | சேஸ்சைட் .. | ½ கன யார் | .. .. .. | ஐடீஎம்எஸ் 2 |
| 10 .. | டிை .. | டிை | .. .. | ஐடீஎம்எஸ் 3 |
| **கொங்கிறீற் கலப்பிகள் :** | | | | |
| 11 .. | றன்சம் றவ்ப்பியர் .. | 5/3 கன அடி 3 சங். 2 ஸிங்க்ஸ் 1ஸ்ப்றெக்கெற்றுடன் | .. | ஐடீசீஎம் 12 |
| 12 .. | டிை .. | டிை | டிை .. .. | ஐடீசீஎம் 13 |
| 13 .. | டிை .. | டிை | டிை .. .. .. | ஐடீசீஎம் 14 |
| 14 .. | டிை .. | டிை | டிை .. .. .. | ஐடீசீஎம் 22 |
| 15 .. | டிை .. | டிை | டிை .. .. .. | ஐடீசீஎம் 23 |
| 16 .. | டிை .. | டிை | டிை .. .. .. | ஐடீசீஎம் 31 |
| 17 .. | டிை .. | டிை | டிை .. .. .. | ஐடீசீஎம் 32 |
| 18 .. | டிை .. | டிை | டிை .. .. .. | ஐடீசீஎம் 35 |
| 19 .. | டிை .. | டிை | டிை .. .. .. | ஐடீசீஎம் 48 |
| 20 .. | டிை .. | டிை | டிை .. .. .. | ஐடீசீஎம் 52 |
| 21 .. | டிை .. | டிை | டிை .. .. .. | ஐடீசீஎம் 55 |
| 22 .. | டிை .. | டிை | டிை .. .. .. | ஐடீசீஎம் 56 |
| 23 .. | பாக்கர் .. | 14/10 கன அடி 3 சங்.2 லிங்க்ஸ் 1 ஸ்ப்றெக்கெற்றுடன் | .. | ஐடீசீஎம் 58 |
| 24 .. | டிை .. | டிை | டிை .. .. | ஐடீசீஎம் 63 |
| 25 .. | றன்சம் றவ்ப்பியர் (7 என்ரி) .. | 10/7 டிை | டிை .. .. | ஐடீசீஎம் 64 |
| 26 .. | பார்க்கர் (10 எஸ்என்ரி) .. | 14/10 டிை | டிை .. .. | ஐடீசீஎம் 82 |
| **அளவைக் கருவிகள் :** | | | | |
| 27 .. | சுய இயக்க இரணைபக்கற் .. | | .. .. .. | ஐடீபீடபிள்யு 2 |
| 28 .. | டிை .. | | .. .. .. | ஐடீபீடபிள்யு 8 |
| 29 .. | டிை .. | | .. .. .. | ஐடீபீடபிள்யு 9 |
| 30 .. | டிை .. | | .. .. .. | ஐடீபீடபிள்யு 10 |
| 31 .. | டிை .. | | .. .. .. | ஐடீபீடபிள்யு 15 |
| 32 .. | டறுக் (கூறு) இல.2 .. | | .. .. .. | 8 |

4–748/2—24.4.1970 ந் திகதிய வர்த்தமானி இல. 14,903

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.

### அட்டவணை—1970

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏப்பிறல் | .. | 3.4.70 | வெள்ளி | .. | 25.3.70 | புதன் | .. | பி. ப. | 3.30 |
| | | 10.4.70 | வெள்ளி | .. | 3.4.70 | வெள்ளி | .. | பி. ப. | 3.30 |
| | | 17.4.70 | வெள்ளி | .. | 8.4.70 | புதன் | .. | பி. ப. | 3.30 |
| | | 24.4.70 | வெள்ளி | .. | 17.4.70 | வெள்ளி | .. | பி. ப. | 3.30 |
| | | 30.4.70 | வியாழன் | .. | 23.4.70 | வியாழன் | .. | பி. ப. | 3.30 |
| மே | .. | 8.5.70 | வெள்ளி | .. | 30.4.70 | வியாழன் | .. | பி. ப. | 3.30 |
| | | 15.5.70 | வெள்ளி | .. | 8.5.70 | வெள்ளி | .. | பி. ப. | 3.30 |
| | | 22.5.70 | வெள்ளி | .. | 15.5.70 | வெள்ளி | .. | பி. ப. | 3.30 |
| | | 29.5.70 | வெள்ளி | .. | 22.5.70 | வெள்ளி | .. | பி. ப. | 3.30 |
| யூன் | .. | 5.6.70 | வெள்ளி | .. | 29.5.70 | வெள்ளி | .. | பி. ப. | 3.30 |
| | | 11.6.70 | வியாழன் | .. | 5.6.70 | வெள்ளி | .. | பி. ப. | 3.30 |
| | | 18.6.70 | வியாழன் | .. | 11.6.70 | வியாழன் | .. | ந. ப. | 12.00 |
| | | 25.6.70 | வியாழன் | .. | 18.6.70 | வியாழன் | .. | ந. ப. | 12.00 |

எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1970 ஆம் ௵ மாச்சு ௴ 5 ஆந் உ.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.